## பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, புலியூர் காலனி, எண்.245,மேற்கு தெரு என்ற முகவரியை சேர்ந்த சக்கரை என்பவரின் மனைவி குப்பாயி என்பவர் தனது மருமகள் ரஞ்சனி என்பவருக்கு எதிராக கடலூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளார். அந்த மனு விசாரணைக்காக குள்ளஞ்சாவடி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இம்மனு மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க, குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரியும் பாலசுந்தரம் என்பவர் குப்பாயி மகன் ஐயப்பன் என்பவரிடம் ரூ.5,000/– லஞ்சமாக கேட்டுள்ளார். இதுகுறித்து மேற்படி ஐயப்பன் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் கடந்த 07.03.2023 ஆம் தேதி புகார் கொடுத்துள்ளார். இந்த புகார் மனு மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இன்று 13.03.2023 மாலை குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் வைத்து சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுந்தரம் என்பவர் ஐயப்பன் என்பவரிடம் லஞ்ச பணம் ரூ.5,000/–த்தை கேட்டு பெற்ற போது, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் தலைமையிலான காவல் குழுவினர் சிறப்பு உதவி ஆய்வாளர் T.பாலசுந்தரம் என்பவரை கையும்களவுமாக பிடித்து கைது செய்தனர்.